பஸிபிக் தீவுகள்.—18 வோட்டுகள் எதிரிடையாயும், 5564 வோட்டுகள் சார்பாயும் கொடுக்கப்பட்டு, டாகிடி, மூரியா, டாமாடு தீவுகள் பிரிடன் (ஜெனரல் டி கால்) கக்ஷியைச் சேர்ந்துகொண்டன.

பிரான்ஸ்.—எம். டலாடியர், எம். ரெய்நாட், ஜெனரல் காமலின், கண்காணிப்பில் இருக்கிறார்கள். எம். மாண்டல் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கடல் யுத்தம்.—கீழ் மெடிடரேனியனில் பிரிடிஷ் கடற்படை இரட்டிக்கப்பட்டிருக்கிறது. எதிரியின் கப்பல்கள் ஒளிந்துகொண்டிருக்காதபடி மெடிடரேனியன் கடல் முழுவதும் சோதனை போடப்பட்டது. டாடிகானிஸ் தீவுகளில் இதாலியர் வைத்திருக்கும் கப்பல் நிலயம் எதிர்க்கப்பட்டது. உயிர் தப்பினால் போதுமென்று இதாலியக்கப்பல்கள் ஒளிந்துகொண்டிருக்கின்றன.

விமான எதிர்ப்புகளின் விவரம் அடுத்த பக்கத்தில் பார்க்கலாம்.

தேதி. பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
2—9—40. (திங்கட் கிழமை.)		
வெடிமருந்து ஆலை—ஸில்பஸ்க் ...	......	வெடித்தது.
ரெயில்வே ஜங்ஷன்—ஜெனோவாவிலுள் (Genoa)ள ஸான் பயர் டீ அரீனு (San Pier D' Arena).		
மின்சார உற்பத்திச்சாலை—ஜெனோவா (Genoa).	......	நாசமாயிற்று.
எண்ணெய் ஆலை—லட்விக்ஷாபன் (Ludwigshafen), பிராங்பர்ட் (Frankfurt).	......	தீப்பிடித்தன.
பாஸ்க் (Bosch) பிளக்ஸ் (Plugs) ஆலை—ஸ்டட் கார்ட் (Stuttgart).		
பேயர் வெடிதுண்டுகள் ஆலை—கொலோன் (Cologne) டார்ட்மண்ட் (Dortmund)—எம்ஸ் (Ems) கால்வாய்.		
பிரஞ்சு துறைமுகம்—லோரியண்ட் (Lorient)		
பீரங்கிகள்—காப் கிரிஸ்நெஸ் (Capgrisnez).	2 விமானங்கள்.	
கப்பல்கள்—டச்சு (Dutch) கடற்கரை, ஸோனி வளைகுடா (Sogne fjord).	......	அநேக கப்பல்கள் நாசமாயின.
ஆகாசக் கப்பல்—வடக்குக் கடல் (North-sea).	......	சுட்டு வீழ்த்தப் பட்டது.
எண்ணெய்க் கிடங்குகள்-ப்ளஷிங் (Flushing).	......	தீப்பிடித்தது.
துறைமுகம்—ஆஸ்டெண்ட் (Ostend) ...	1 விமானம்.	
3—9—40. (செவ்வாய்க்கிழமை).		
புலாயின் (Boulogne), கலே (Calais) ...	......	ஒரே வெடிகுண்டு வீச்சு.
ராணுவழக்யத்வம் வாய்ந்த சாமான்கள் ...	......	எங்கும் தீப்பிடித்தது
ஹார்ட்ஸ் (Hartz) மலை, பெர்லினுக்(Berlin)கு வடக்கேயுள்ள க்ருனிவால்டு (Grunewald) காடுகள்.	......	பெரிய வெடிச் சத்தங்கள் கேட்டன.
மின்சார உற்பத்தி ஆலைகள், யுத்த தளவாடங்கள் செய்யும் ஆலை—பெர்லின் (Berlin).	சேதமில்லை.	அதிகச் சேதம்.
பிளாக் (Black) காடுகள்—பேடன் பேடனு(Badenbaden)க்கு கிழக்கே.	......	தீப்பிடித்தன,

தேதி. பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
3—9—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.		
விமான நிலயங்கள்—லாடோகுவே (Le Touquet), ஸெயிண்ட் ஓமர் (St. Omer), கலே (Calais), கினியா (Guniea), அப்பீவில் (Abbeville) இன்னும் அநேக இடங்களிலும்.		
எண்ணெய்க் கிடங்குகள்—மாக்டீபர்க் (Magdeburg).		
சாமான் கிடங்குகள்—ஹாம் (Hamm), ஷீவர்ட் (Schwerte).		
உலை—மெர்ஷிக் (Marzig) ...		
சிறிய கப்பல்கள்—பெவிலண்ட் (Beveland) கால்வாய், டெர்ன்யூஸின் (Ternevzen).		
கப்பல் நிற்குமிடங்கள்—அநேக இடங்களில்.		
சாமான் கிடங்குகள், கப்பல் நிற்குமிடங்கள், மத்தியக் கிழக்குப் பிரதேசங்கள் (Middle East).		
4—9—40. (புதன்கிழமை).		
பெர்லின் (Berlin)—இரவு முழுவதும் படையெடுப்பு இருந்தது.		
ஒரு மின்சார உற்பத்திச்சாலை, ஒரு விமானத் தொழிற்சாலை பெர்லின் (Berlin).		
ராணுவமுக்யத்வம் வாய்ந்த இடங்கள்—பிளாக் (Black) காடுகள்.	...... 2 விமானங்கள்.	வெடிச் சத்தம் கேட்டது.
எண்ணெய்க்கிடங்குகள்—மாக்டீபர்க் (Magdeburg), செர்பரோ (Cherbourg).	......	தீப்பிடித்தன.
சாமான் கிடங்குகள்—நீன்பர்க் (Nienburg) தெற்கு ப்ரமன் (Bremen).		
விமான நிலயங்கள்.—ஜெர்மானியர் ஆக்ரமித்திருக்கும் பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).	......	நாசமாயின.
கப்பல் நிற்குமிடங்கள்.—டெர்ன்யூஸென் (Terneuzen).	......	......
எண்ணெய் ஆலை.—1200 மைல்களுக்கு அப்பாலுள்ள போலிட்ஸ் (Politz).	......	தீப்பிடித்தது.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
4—9—40.	(புதன்கிழமை)—தொடர்ச்சி.		
	சைன்யங்கள் வசிக்குமிடம்.—பெர்பரா (Berbera), இஷா (Isha), பாய்டோ (Baido).	……	……
	கப்பல் நிற்குமிடங்கள்.—அஸாப் (Assab).	……	4 விமானங்கள்.
	ராணுவ காரியாலயங்கள்.—கஸாலா (Kassala).		
5—9—40.	(வியாழக்கிழமை).		
	புலாயினிலிருந் (Boulogne) து டன்கர்க் (Dunkirk), வரையுள்ள துறைமுகங்கள்.	……	பலமான படையெடுப்பு.
	எண்ணெய் ஆலைகள்.—பால்டிக்கிலு (Baltic)ள்ள, போலிட்ஸ் (Politz).	……	இரண்டாந்தடவை.
	ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—பிளாக் (Black) காடுகள்.	……	த்வம்சம்செய்யப் பட்டன.
	எண்ணெய்க்கிடங்குகள்.—ரீஜன்ஸ்பர்க் (Regensburg), கீல் (Kiel).	……	……
	ஹார்ட்ஸ் (Hartz), மலைகள்.—	……	தீப்பிடித்தது.
	எண்ணெய் ஆலைகள்.—ஸ்டெட்டின் (Stettin), ஹாம்பர்க் (Hamburg), ரிஜன்ஸ்பர்க் (Regensburg).	……	தீப்பற்றியது.
	கப்பல் நிற்குமிடங்கள்.—எம்டன் (Emden).	……	……
	சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest).	……	……
	விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany), ஹாலந்து (Holland).	……	சேதமாயின.
	பீரங்கிகள்.—காப்கிரிஸ்நெஸ் (Capgrisnez).	……	……
6—9—40.	(வெள்ளிக்கிழமை),		
	மின்சார உற்பத்திச்சாலை, இருப்புப்பாதைகள், ஸ்பான்டா (Spandau), விமானத் தொழிற்சாலைகள், ஸால்ஷாப் (Salzhof), எண்ணெய்க்கிடங்குகள், இன்னும் அநேக ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—பெர்லின் (Berlin).	……	அதிகச்சேதம். அநேக இடங்களில் தீப்பிடித்தன. அநேகர் மாண்டனர். அநேகருக்குக்காயம்.

தேதி. பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
6—9—40. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.		
பிளாக் (Black), காடுகள்.	......	தீப்பிடித்தது.
இருப்புப்பாதைகள், ரயில்வண்டிகள்.—க்ரெபெல்டு (Krefeld), ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest), மான்ஹீம் (Mannheim), எஹ்ரான் (Ehrang).		நாசமாயின.
விமான நிலயங்கள், இருப்புப்பாதைகள்.—ரூர் (Ruer), ரைன்லாண்ட் (Rhineland).	......	நாசமாயின.
சாமான் கிடங்குகள்.—ப்ரஸல்ஸ் (Brussels).	......	......
விமான நிலயங்கள்.—பென்லோ (Benlo), கலே (Calais), ஸெயிண்ட் ஓமர் (St. Omer), லாடாகுவே (Le Touquet), டன்கர்க் (Dunkirk).	......	உபயோகமில்லாமல் போய்விட்டன.
பீரங்கிகள்.—கலேயக்கருகில்.	2 விமானங்கள்.	......
துறைமுகங்கள்.—புலாயின், இன்னும் அநேக இடங்கள்.	......	......
ரயில்வே ஸ்டேஷன்கள்.—ஜிபுடி, (Jibuti), எரிடிரியா (Eritrea), ஹார்கிஸா (Hargeisa), ஹார்மில் (Harmil) தீவு.	...... சேதமில்லை.	அதிகச்சேதம். ராணுவக்கட்டடங்கள் நாசமாயின.
7—9—40. (சனிக்கிழமை).		
துறைமுகங்கள்.—கலே (Calais), புலாயின் (Boulogne).	......	தீப்பிடித்தன.
சிறிய கப்பல்கள்.—ஆஸ்டெண்ட் (Ostend), இன்னும் அநேக துறைமுகங்கள்.	......	நாசமாயின.
க்ருப் (Krupp), தொழிற்சாலை.—எஸ்ஸன்		
யுத்த தொழிற்சாலைகள்.—எம்டன் (Emden), ஷ்வீயிப்ரக்கன் (Zewibrucken).	......	சேதமாயின.
எண்ணெய் ஆலை.—கெல்ஸன்கர்சன் (Gelsenkirchen).	......	வெடிக்கும் சத்தம் கேட்டது.
ரயில்வே சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), மான்ஹீம் (Mannheim), எஹ்ராங் (Ehrang).	......	......

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
7—9—40.	(சனிக்கிழமை)—தொடர்ச்சி.		
	யுத்த தளவாடங்கள்.—பிளாக் (Black) காடுகள்.	......	தீப்பற்றியது.
	பீரங்கிகள்—விமானஞ்சுடும் பீரங்கிகள்.—கலேய்க்கருகில்.	......	......
	விமான நிலயங்கள்.—கோல்மார் (Colmar), கெல்ஸன்கர்சன் (Gelsenkirchen), வீஸல் (Wesel), க்ரபெல்டு (Krefeld), வார்க்யூவில் (Warqueville), ஸோயஸ்ட் (Soest), இண்ட்ஹோவன் (Eindhoven)	...... நஷ்டமில்லை.	அநேகம் நாசமாயின.
8—9—40.	(ஞாயிற்றுக்கிழமை).		
	ஹாம்பர்க் (Hamburg)—3 மணி நேரம்.	......	அநேக இடங்கள் தீப்பிடித்தன.
	கப்பல் நிற்குமிடங்கள், துறைமுகங்கள்.—	......	......
	ஹாம்பர்க் (Hamburg); ப்ளோம் (Blohm), வோஸ் (Voss) கூடங்கள்.	......	நாசமாயின.
	ரயில்வே ஸ்டேஷன்—எல்ப் (Elbe) நதியின் வடகரை.	......	......
	கப்பல்கள்.—பிரஞ்சு (French), பெல்ஜியம் (Belgium) துறைமுகங்கள்.	......	......
	ஆஸ்டெண்ட் (Ostend).	......	......
	கப்பல் ஆலைகள்.—டன்கர்க் (Dunkirk), புலாயின் (Boulogne).	......	தீப்பிடித்தது.
	துணை காவல் கப்பல்கள்.—வடகடல் (North Sea).	......	......
	துறைமுகங்கள்.—எம்டன் (Emden), ப்ரமன் (Bremen), கலே (Calais).	நஷ்டமில்லை.	......
	விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany), விரோதி ஆக்ரமித்திருக்கும் நாடுகள்.	......	அநேகம் சேதமாயின.
	இருப்புப்பாதை.—அடிஸ் அபாபாவுக்கு (Addis Ababa),ம் ஜிபுடி (Jibuti)க்கும் நடுவில் எரிடிரியாவிலுள்ள (Eritrea) மஸாவா (Massawa).	......	நாசமாயிற்று தீப்பிடித்தது.
	மோட்டார் வண்டிகள்.—மொகாடிஸ்ஸியோ.	......	எல்லாம் நாசமாயின.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
3—9—40. (செவ்வாய்க்கிழமை).			
	காலையில்.—தென்கிழக்குக் கடற்கரை, கெண்ட் (Kent), எஸ்ஸெக்ஸ் (Essex), லண்டன் (London).	......	சொற்பச்சேதம்; சிலருக்குக் காயம். ஒரு விமானமும் வரவில்லை.
	பிற்பகலில்.—கெண்ட் (Kent), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், லண்டன் (London).	......	சேதம் பிரமாதமில்லை. குண்டுகள் விழவில்லை.
	மாலையிலும், இரவிலும்.—லண்டன் (London), இங்கிலாந்திலும், வேல்ஸி (Wales)லும், ஸ்காத்லாந்தி (Scotland)லும் உள்ள பட்டணங்கள்.	...... 25 விமானங்கள்.	முக்கியமான சேதமில்லை. 15 விமானங்கள் 8 விமானிகள் பத்திரம்.
4—9—40. (புதன்கிழமை).			
	காலையில்.—தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், ஒரு வடகிழக்கு கடற்கரைப்பட்டணம்.		துரத்தியடிக்கப் பட்டன.
	விமான நிலயங்கள்.—எஸ்ஸெக்ஸ் (Essex), கெண்ட் (Kent).	......	சேதமேயில்லை. உயிர்ச் சேதமில்லை.
	பிற்பகலில்.—லண்டன் (London) பிரதேசம்.	......	குண்டுகள் விழவில்லை.
	இரவில்.—லண்டனி (London)லும்; இன்னும் இங்கிலாந்திலும், அநேக இடங்களிலும் சிறுசிறு படையெடுப்புகள் இருந்தன.	...... 54 விமானங்கள்.	சில வீடுகள் சேதமாயின. சிலருக்குக்காயம். 17 விமானங்கள்; 12 விமானிகள் பத்திரம்.
5—9—40. (வியாழக்கிழமை).			
	காலையில்.—தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், வேல்ஸ் (Wales), லண்டனி(London)ன் சுற்றுப்புறங்கள், கெண்ட் (Kent).	......	துரத்தியடிக்கப் பட்டன. சொற்பச்சேதம்.
	பிற்பகலில்.-லண்டன் (London), கெண்ட் (Kent) கடற்கரை.	......	சேதமேயில்லை.
	விமான நிலயங்கள்.—தேம்ஸ் (Thames) நதியின் இருபக்கங்களிலும்.	......	......

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
5—9—40. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி..			
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம், கெண்ட் (Kent), வடமேற்கு இங்கிலாந்தின் சில பட்டணங்கள். மால்டா (Malta).	39 விமானங்கள்.	குண்டுகள் விழவில்லை, 20 விமானங்கள், 9 விமானிகள் பத்திரம். சிலருக்குக் காயம்.
6—9—40. (வெள்ளிக்கிழமை).			
	காலையில்.—கெண்ட் (Kent) கடற்கரை, தேம்ஸ் (Thames) பள்ளத்தாக்கில் ஒரு தொழிற்சாலை.	......	விரோதிகளுக்கு அதிகச்சேதம்.
	பிற்பகலில்.—லண்டன் (London), கெண்ட் (Kent) கடற்கரை, தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்.	......	சொற்பச்சேதம். ஒருவருக்கும் காயம் இல்லை.
	மாலையில்.—லண்டன் (London), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்.		சிலருக்குக் காயம்.
	இரவில்.—லண்டன் (London), இன்னும் சில பட்டணங்கள் (வடமேற்கு இங்கிலாந்தில்).	46 விமானங்கள்	சில கட்டடங்கள் நாசமாயின; சிலர் இறந்தனர். 19 விமானங்கள், 10 விமானிகள் உயிர் தப்பினர்.
	மால்டா (Malta), ஹைபா (Haifa), ஏடன் (Aden).	2 விமானங்கள்.	ஐவர் மாண்டனர். 13 பேர்களுக்குக் காயம்.
7—9—40. (சனிக்கிழமை).			
	காலையில்.—கெண்டி (Kent)ல் ஒரு விமான நிலயம், மேற்குப் பிரதேசத்தில் ஒரு பட்டணம்.	......	சிலருக்குக் காயம். சில கட்டடங்கள் நாசமாயின.
	பிற்பகலில்.—விமான நிலயங்கள்—ஸர்ரே (Surrey), கெண்ட் (Kent), எஸ்ஸெக்ஸ் (Essex), கிழக்கு லண்டன் (London).	......	முக்கியமான சேதம் இல்லை.
	மாலையிலும், இரவிலும்.—லண்டன் (London)—சண்டை ஆரம்பித்ததில் இருந்து இதுதான் பெரிய விமானப் படையெடுப்பு.		286 ஜனங்கள் மாண்டனர். 1400 பேர்களுக்குக் காயம். கட்டடங்களுக்குச் சேதம்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
7—9—40. (சனிக்கிழமை)—தொடர்ச்சி.			
	தேம்ஸ் (Thames) நதியின் இருபக்கங்களும்.	103 விமானங்கள்.	22 விமானங்கள்; 8 விமானிகள் பத்திரம்.
	மாத்ரூ (Matruh), போர்ட்ஸுடான் (Portsudan.).	2 விமானங்கள்.	சிலருக்குக்காயம்.
8—9—40 (ஞாயிற்றுக்கிழமை).			
	காலையில்.—டோவர் (Dover), கெண்ட் (Kent), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்.	......	சொற்பச்சேதம்.
	பிற்பகலில்.—லண்டன் (London) பிரதேசம்.	......	குண்டுகள் விழவில்லை
	மாலையிலும், இரவிலும்.—லண்டன் (London), தேம்ஸ் (Thames) நதிப் பிரதேசம், மால்டா (Malta).	11 விமானங்கள்	சில கட்டடங்கள் நாசமாயின, சிலர் இறந்தனர்; சிலருக்குக் காயம். 3 விமானங்கள்; 1 விமானி பத்திரம்.
9—9—40. (திங்கட்கிழமை).			
	காலையில்.—விமானப் படையெடுப்பு இல்லை.	......	......
	பிற்பகலிலும், மாலையிலும்.—லண்டன் (London), கெண்டி (Kent)ல் ஒரு பட்டணம், ஸஸ்ஸெக்ஸ் (Sussex), டோவர் (Dover).		சொற்பச்சேதம். சிலர் மாண்டனர். சிலருக்குக் காயம்.
	இரவில்.—லண்டன் (London), தேம்ஸ (Thames) நதி முகத்துவாரம், வடகிழக்கு இங்கிலாந்து; மிட்லண்ட்ஸி (Midlands)ல் சில பட்டணங்கள்.	52 விமானங்கள்.	சில கட்டடங்கள் நாசமாயின. சொற்பச்சேதம். 13 விமானங்கள். 3விமானிகள் உயிர் தப்பினர்.

அனுபந்தம் I.

சுப சின்னங்கள்.

ஒருவருஷ யுத்தத்தின் பிறகு.

நாடக ஸீன்களைப்போல் யுத்த சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து கொண்டிருக்கின்றன; பத்திரிகைகள் எழுதுவதற்கும், ரேடியோ ஒலி பரப்புவதற்கும் ஓய்வில்லை. இந்தச் சமாசார வெள்ளத்தில் சில சுப சின்னங்கள் மறைந்து கிடக்கின்றன. ஸ்வதந்திரத்தையும், சமாதானத்தையும் விரும்பும் நமக்கு இவைகள் ஆறுதலைக்கொடுக்கின்றன: ஹிட்லருக்கும், முஸோலினிக்கும் இவைகள் பிடிக்காத செய்திகள்: ஏனெனில், இப்பொழுதும், பின்னும், இவர்களுக்கு இந்தச் சம்பவங்களிலிருந்து அனுகூலமேற்படாது.

சுப சின்னங்களாவன (உதாரணமாக):—

2. இது வரையில் நம்பிக்கையில்லாதிருந்த அமெரிக்கா, மிஸ்டர் சர்ச்சில் ஆகஸ்டு௴ 20-ம் தேதி பேசிய பேச்சிலிருந்து, யுத்தத்தை ஹிட்லர் இந்த வருஷத்தில் முடித்துக்கொள்ள முடியாதென்று தெரிந்து கொண்டது. மிஸ்டர் சர்ச்சிலுடைய 4-ம் தேதிப் பேச்சிலிருந்து ஹிட்லரும் மனது புண்பட்டிருப்பது நிச்சயம். ஸெப்டம்பர்௴ 4, 5 தேதிகளில் மிஸ்டர் சர்ச்சில் சொன்னதாவது:-

(1) 1941, 1942-ம் வருஷங்களுக்கு யுத்தம் நீடிக்கும். திட மனதோடு, போட்ட திட்டப்படி, தயார் செய்துகொண்டு யுத்தத்தை நடத்த வேண்டும்.

(2) மத்தியக் கீழ்நாடுகளில் யுத்தமேற்படப்போகிறது. அங்கே நமது பெரிய சைன்யங்கள் நிற்கின்றன; அவைகளை மேலும் பலப்படுத்த முடியும்.

(3) கடற்படை பலத்தால் உபசைன்யங்கள் மத்தியக் கீழ்நாடுகளுக்கு வந்து சேர்ந்து விட்டன.

3. அமெரிக்காவுக்கு நம்பிக்கையேற்பட வேறு சில காரணங்களுமுண்டு:—

(1) ஏழு வாரங்களாக ஜெர்மனி விமானங்களைக்கொண்டு எதிர்த்தும், பிரிடன் தன்னைப் பாதுகாத்துக்கொண்டு ஜயித்து நிற்கிறது; ஜெர்மனிக்குப் பலத்த நஷ்டத்தையும் விளைவித்திருக்கிறது.

(2) இந்த எதிர்ப்பினால் ஒருவரும் மனம் கலங்கவில்லை; இதற்கு லண்டனில் வசிக்கும் அமெரிக்க நிருபர்கள் சாக்ஷி.

(3) ஜெர்மனியையும், அதன் கைவச நாடுகளையும், இரவு தவறாது சென்று பிரிடிஷ் விமானங்கள் எதிர்க்கின்றன; ஜெர்மனிக்கு இதைத் தடுக்க முடியவில்லை.

(4) இந்த வருஷத்தில் வேறு சில துரதிருஷ்டங்கள் ஏற்பட்டிருந்தாலும், பிரிடிஷ் கடல் ஆதிபத்தியம் குறையவில்லை.

4. அமெரிக்காக் கண்டத்தில் பிரிடனுக்குச் சொந்தமான சில இடங்களில் அமெரிக்கர்களுக்குச் சில வசதிகள் செய்து கொடுக்கப் போவதாக மிஸ்டர் சர்ச்சில் சில தினங்களுக்கு முன் காமன்ஸ் சபையில் தெரிவித்தார். அப்பொழுது "ஒரே பாஷை (ஆங்கிலம்) யைப் பேசும் பிரிடிஷ்காரர்களும், அமெரிக்கர்களும், கலக்க (சேர)ப் போகின்றார்கள். இதில் எனக்குப் பயமில்லை; இதை நிறுத்தவும் முடியாது. (மிஸிஸிபி) நதியில் ஏற்படும் பிரவாகத்தைத் தடுக்க முடியுமா? அதே மாதிரி இந்த அந்யோன்யத்தைத் தடுக்க முடியாது. ஒருவர் தாக்ஷண்யத்துக்கும் இது கட்டுப்படாது. இதிலிருந்து க்ஷேமமுண்டாகப்போகிறது" என்று சொன்னார். இதைக் கேட்ட காமன்ஸ் சபை கரகோஷம் செய்தது. இந்த அந்யோன்யத்தின் பயனாக 50 நாசகாரிகள் அமெரிக்கா பிரிடனுக்குக் கொடுத்திருக்கிறது. இவைகள் பிரிடனுக்கு அவசியமானவை; இந்தச் செய்தியைக் கேட்டதிலிருந்து ஹிட்லருக்கும், முஸோலினிக்கும் ஆத்திரம் அதிகப்பட்டிருக்கிறது.

5. இந்தோ-சைனாவை, ஜப்பான் சண்டைக்கு இழுத்ததல்லவா? பிரிடனும், அமெரிக்காவும் செய்த எச்சரிக்கையிலிருந்து இப்பொழுது ஜப்பான் அனுப்பிய யுத்தப் பத்திரிகை (Ultimatum) யை வாபஸ் வாங்கிக்கொண்டிருக்கிறது. சர்வாதிகார நாடுகளுக்கு வாபஸ் வாங்கிக்கொள்ளும் வழக்கம் கிடையாதே. ஜப்பானுக்குப் பயமேற்பட்டுவிட்டதோ!

6. வெஸ்ட் இண்டீஸ், ஆஸ்திரலேஷ்யா, ஸென்டிரல் ஆபிரிக்காப் பிரதேசங்களில் உள்ள பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகள், ஜெர்மனியின் பயம் நீங்கிப் பிரிடனோடு சேருகின்றன. இந்தத் தேசங்களிலிருந்து வரும் பேச்சுகளிலிருந்து இப்படி அனுமானிக்கவேண்டியிருக்கிறது.

7. வட ஆபிரிக்காவில் பிரமாதமாக யுத்தம் நடக்கப் போவதாகச் சொன்னார்கள். ஒன்றையும் காணோம். ஏன் தாமதம்? தாமதிக்கத் தாமதிக்க நமக்கு பலம்; வேண்டிய சைன்யங்களையும், தளவாடங்களையும் நாம் சேர்த்துக் கொண்டுபோகலாம். பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்ளலாம். எதிரிகளுக்குச் சரக்குகள் வரும் வழிகளையெல்லாம் நாம் அடைத்து விட்டோம். ஏற்கனவே சேர்த்து வைத்திருக்கும் உணவைக்கொண்டுதான் ஜீவிக்கவேண்டும். தாமதிக்கத் தாமதிக்க எதிரிக்கு நஷ்டம்.

8. பிரிடன் மேல் படையெடுப்புத் தாமதித்திருப்பதற்கு ஒரு காரணம், அமெரிக்க எண்ணெய் (பெட்ரோல்) ஏற்றுமதி நின்றுவிட்டதாய் இருக்கலாம். அது எப்படி இருந்தபோதிலும், அமெரிக்க பெட்ரோல் அகப்படாததிலிருந்து, ஜெர்மனி, இதாலி, ஜப்பான் தேசங்களுக்கு எண்ணெய்த் திண்டாட்டமேற்பட்டு இருக்கிறது.

யோஜித்துப்பார்க்கப் பார்க்க, ஆராய்ச்சி செய்யச் செய்ய, இன்னமெத்தனையோ சுப சின்னங்கள் புலப்படும். இவைகளில் சில பெரிய சின்னங்களை இங்கு சொல்லுகிறேன். ஒன்று, ஜெர்மனி மாதத்துக்கு 1,800 விமானங்களைக் கட்டுகிறது. ஆனால், ஒரு நாளைக்கு 50 வீதம், மாதத்துக்கு 1,500 எதிரி

விமானங்களை நாம் சுட்டுத்தள்ளிவிடுகிறோம். இரண்டாவது, ஸெப்டம்பர் 2, 5 தேதிகளுக்குள் இதாலி கப்பல்களெல்லாம், பிரிடிஷ் கடற்படையைக் கண்ட உடனே ஓடி ஒளிந்தன. சில ஓட்டைக்கப்பல்கள்தான் பாக்கி. மூன்ருவது, மாதத்துக்கு 700 விமானங்கள் கட்டியனுப்புவதாக அமெரிக்கா ஒப்பந்தம் செய்து கொடுத்திருக்கிறது. நான்காவது, ஜெர்மனியைச் சுற்றிப்போட்டிருக்கும் முற்றுகை பயன்பட்டு வருகிறது. ஐந்தாவது, அகோரமான மாரிகாலம் சமீபிக்கிறது. இது ஜெர்மனிக்குக் கஷ்டம். இப்படி எவ்வளவோ சொல்லிக்கொண்டு போகலாம். எல்லாம் சந்தோஷ சின்னங்களே.

அனுபந்தம் I-A.

வேறு சில சின்னங்கள்.

மின்னல்-எதிர்ப்பு-அனுபவம்.—ஸெப்டம்பர் முதல்பாதி முடியப்போகிறது. ஜெர்மனி படையெடுக்கக்காணும். மாரிகாலம் சமீபித்து விட்டது. இருந்தபோதிலும் ஹிட்லர் சும்மாயில்லை. மிகக் கேவலமான காரியங்களைச் செய்யத் தலைப்பட்டு விட்டார். ஸெப்டம்பர் 6, 7, 8-ம் தேதிகளில் லண்டன் கீழ்பாகங்களை எதிர்த்தது எளிதில் மறக்கக்கூடியதல்ல; பயங்கரத்தில் இதற்கு ஈடு வேறு எதிர்ப்பொன்றும் கிடையாது. எல்லாவித விமானங்களும், குண்டுகளும், தந்திரங்களும் உபயோகப்படுத்தப் பட்டன. கண்டவிடங்களிலெல்லாம் வேணுமென்றே குண்டுகள் வீசப்பட்டன. பிரிடிஷ் உத்தியோக முறையில் இவைகளைப்பற்றி உள்ளபடி அறிக்கைகள் விடுக்கப்பட்டிருக்கிறது. திருப்தியைக் கொடுக்கிறது. பிரிடனுடைய எதிர்ப்பால் ஜெர்மனிக்கு ஏற்படும் நஷ்டத்தை ஜெர்மன் அறிக்கைகள் மறைத்து விடுகின்றன. ஆனால் யுத்தக் கேந்திர ஸ்தானங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம், உயிர்ச்சேதம், ரயில், மோட்டார்கள் ஓடாது தடைப்பட்டது, கப்பல் துறைகள் பழுது முதலிய எல்லாவற்றையும் ஒளிக்காது பிரிடிஷ் அறிக்கை குறிக்கிறது. ஆனால் 9-ம் தேதி அமெரிக்க ஒலிபரப்பு சொல்லியபடி இந்தச் சேதம் எல்லாம், க்ஷவரம் செய்துகொள்ளும் போது முகத்தில் ஏற்படும் வெட்டுக்காயம்போல் சிறு அஸௌகரியத்தைத் தவிர பிரமாதமொன்றுமில்லை. ஒரே நாளில் 103 விமானங்களைத் தோற்றுவிட்ட ஹிட்லருக்கே பெரிய நஷ்டம்.

பிரிடிஷ்—தொழிலாளர் அபிப்பிராயம்.—வெகு உயரத்திலிருந்து வெடிகளைக் குறிபார்த்துப் போடமுடியாது. ஆனல், கண்டவிடங்களில் போடுவது கேவலம், வீரனுக்கெடுத்த காரியமில்லை. இந்தத் தீச்செயலை மரியாதை தவருது கண்டிக்க அகராதியில் வார்த்தைகளில்லை. தொழிலாளிகளைப் பயமுறுத்தப் பார்த்தாற் போலும். ஆனல் தொழிலாளிகளுக்கு மகத்தான, நீங்காத கோபம்தான்

ஏற்பட்டிருக்கிறது. சுரங்க வேலைக்காரச் சங்கத்தின் அக்கிராஸனர் மிஸ்டர் வில் லோதர் பின் வருமாறு சொல்லுகிறுர் :—

“நாங்கள் உயிரோடிருக்கும் வரையில் ஸர்வாதிகாரர்கள் (ஜெர்மனி) பிரிடனில் கால்வைக்கமுடியாது. இதற்குமுன் ஸர்வாதிகார இயக்கத்தின் விஷக்காற்று இங்கு வராதபடி தடுத்தோம்; இப்பொழுது அவர்களிங்கு வந்தால் விரட்டிவிடுவோம். இது பிரிடிஷ் தொழிலாளர் கக்ஷியின் நோக்கம்; இதற்குச் சந்தேகமில்லை. சர்வ தேச—சுரங்க—வேலைக்காரர்கள் சங்கத்தில் நாங்கள்தான் பாக்கி. இதர தேசங்களிலுள்ள கிளைச் சங்கங்களை ஹிட்லர் அடைத்துவிட்டார். இச் சங்கங்களின் மூலதனங்களை அபகரித்து, இவை களின் தலைவர்களைக் கோலைசெய்தோ, அல்லது கைது செய்தோ விலக்கி விட்டார். சுயேச்சைக்கும், ஜன சமத்துவத்துக்கும் பிரிடிஷ் சுரங்க வேலைக்காரர்கள் பாடுபடுகிறுர்கள். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஆபத்து அடியோடு ஒழியும் வரையில் சண்டை செய்வோம். மத-யுத்தத்தைப்போல் பாவித்து, கடைசி வரையில் யுத்தத்தை நடத்துவோம்.”

கிரேஸ்யானிக்கு—முட்டுக்கட்டை.—கிரேஸ்யானி நல்ல சேனுபதிதான்; அவர் கீர்த்திவாய்ந்தவர்; பெரியசைன்யமும் இப்பொழுது அவர் கையிலிருக்கிறது. பிரெஞ்சுக்காரர்கள் தோற்றதிலிருந்து தன்னுடைய டுனிஸ் சைன்யங்களைச் சேர்த்துக்கொண்டு இஜிப்த் எல்லையில் தயாராயிருக்கிருர். ஆனல் அதற்குமேல் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. இஜிப்து சைன்யங்கள் பிரிடனேடு சேர்ந்து நிற்கின்றன. ஆகாராதிகள் வராதபடி பிரிடிஷ் கப்பற்படை தடுக்கிறது. மத்தியதரைக் கடல் நடுபாகங்களில் பிரிடிஷ் சைன்யங்களும், கப்பல்களும் இரட்டிக்கப்பட்டிருக்கின்றன. அநுபவமில்லாத இதாலியர்களும், ராஜவிச்வாசம் இல்லாத ஆபிரிக்கர்களும் கிரேஸ்யானே சைன்யத்திலிருக்கிருர்கள். ஆஸ்திரே லியர், நியூஸிலண்டர்கள், இந்தியர்கள், முதலான பிரிடிஷ் ஸாம்ராஜ்ய கீழ் தேசத்தார்கள், நவீன முறைகளில் நன்ருய் தயாரிக்கப்பட்டு பிரிடனுக்காக சண்டை செய்யத் தயாராயிருக்கிருர்கள். பெரிய யுத்தம் ஏற்படப்போகிறது.

வட துருவத்திலும்-சண்டையா? இரண்டு ஒரு வருஷத்துக்கு முன் சண்டையே உலகத்தில் நின்று விட்டதாகச் சிலர் சொல்லிக்கொண்டார்கள்; மற்றும் சிலர் சண்டை வந்தாலும் பரவாதென்ருர்கள். இப்பொழுது யுத்தம் கிரீன்லாண்டுக்குப் பரவி விட்டது. டென்மார்க் பிடிபட்டதிலிருந்து ஐஸ்லாண்டும், கிரீன்லாண்டும் நாதியற்றுப்போயின. ஐஸ்லாண்டு, கிரீன்லாண்டு வழியாக வட-அட்லாண்டிக் சமுத்திரயாத்திரைக்கு, வியாபார நிமித்தம் வழி பார்க்கப் போவதாக, வியாஜம் வைத்துக்கொண்டு, ஜெர்மானியர் அங்கு நுழைய ஆரம்பித்தார்கள். கானடா துருப்புகள், கிரீன்லாண்ட், ஐஸ்லாண்டுக்கு வந்து விட்டதாயும், அமெரிக்கா இந்த தேசங்களை அமெரிக்கா கண்டத்தைச் சேர்ந்ததாக மன்ரோ-கொள்கைக்குள் படுத்தி, பாதுகாத்து விடுமென்றும் தெரிகிறது.

பேச்சு-மாறுதல்.—அரசாங்கங்களின் அறிக்கைகளையும், பிரசாரங்களையும் பரிசோதித்து வரப்போவதை முன் சொல்வது நிபுணர்களுக்குப் பிடித்தவேலை. ஜெர்மனியும் இதாலியும் சமீபத்தில் நய வார்த்தைகள் பேசுகின்றன. பிரிடன் எதிர்ப்பை அடுத்த வஸந்தத்துக்கு ஒத்திப்போட்டாய் விட்டதாம். பிரிடிஷ் விமானப்படையை ஒழித்துவிட்டு, அதனுடைய வியாபாரப் பாதைகளை அடைத்து விட்டு, பிரிடன் தொழிற்சாலைகளையும் நாசம் செய்து விட்டு, பிரிடிஷார்களின் தைர்யமெல்லாம் சிதைந்த பிறகு (இது ஒரு நாளுமில்லை) பிரிடனைப் பிடிக்கப் படையெடுக்கப்போகிறார்களாம்.

இது நடக்காத காரியமென்பதற்கு அத்தாக்ஷிகளாவன :—

1. 3,30,000 துருப்புக்களை டன்கற்கிலிருந்து பத்திரமாய்க் கொண்டுவந்து உள் நாட்டுப் பாதுகாப்புப் படையை பலப்படுத்தியது.
2. ஆரம்பம் முதற்கொண்டு, ஜெர்மன் விமானப்படையைத் தோற்கடித்துக்கொண்டு வருவது.
3. ஜெர்மனியிலும், இதாலியிலும், தொழிற்சாலைகளையும், வியாபார ஸ்தலங்களையும் பிரிடிஷ் விமானங்களெதிர்ப்பது.
4. தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டங்களை ஜெர்மானியர் பொய் என்ற புகையால் மறைப்பது.

இதோடு, ஆகஸ்ட் 20-ல் பிரதம மந்திரி பேசியதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். மாரி காலம் வருவதற்குள்ளாக பிரிடனைத் தோற்கடித்து, தான் ஏற்கனவே அடைந்த வெற்றிகளை ஜெர்மனி நிலைக்க வைத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் இது வரையில் கிடைத்த லாபமும் நஷ்டமாய் முடியும்.

அனுபந்தம் II.

யார் சொல்வது உண்மை—பிரிடிஷார்களா? நாஸிகளா? கிராப் ஸ்பீ சம்பவத்திலிருந்து ருஜுவாவதென்ன? நஷ்டங்களை மறைக்காமல் நேயக்கக்ஷி ஒப்புக்கொள்ளுகிறது. ஜெர்மன் அறிக்கைகளின் உள்ளெண்ணம் வேறு.

(பிரபல சரித்திரக்காரரும், விபரனுமான ராம்ஸேமூர் எழுதியது).

பிரிடனும், ஜெர்மனியும் வெவ்வேறு விதமாய்ச் சொல்லுவதிலிருந்து எந்த அறிக்கையை நம்புவதென்று புரியவில்லை.

சில உதாரணங்களை எடுத்துச் சோதிப்போம். நான் முதலில் எடுத்துக் கொண்டிருக்கும் உதாரணம் நடந்ததல்ல. கற்பனையாகச் சொல்லுகிறேன் :—

“துணைக்கப்பல்கள் சகிதமாய் பிரிடிஷ் வியாபாரக் கப்பல்கள் சில போய்க் கொண்டிருந்ததாக வைத்துக்கொள்வோம். ஜெர்மனி அவைகளை எதிர்த்துப்

பிரிடிஷ் சண்டைக்கப்பல் (Cruiser) ஒன்றையும், நாசகாரி இரண்டையும், விமானங்கள் 10-ஐயும் வியாபாரக் கப்பல்கள் பலவற்றையும் நாசமாக்கிற்று ; ஜெர்மனிக்கு நஷ்டம் மூன்று விமானங்கள்தான்" என்று ஜெர்மன் அறிக்கை சொல்லும்.

இதற்கு எதிரிடையாக, "ஜெர்மன் வெடிகளெல்லாம் கடலில் விழுந்தன ; ஒரு வியாபாரக் கப்பல்தான் அடிபட்டது ; 4 ஜெர்மன் வெடி-விமானங்களும், 6 சண்டை-விமானங்களும் சேதப்பட்டன ; நம்முடைய விமானங்கள் இரண்டு தான் திரும்பவில்லை" என்று பிரிடிஷ் அறிக்கை கூறும்.

இந்தத் திருஷ்டாந்தம் மிகையாகாது. இரண்டு அறிக்கைகளும் பொய் யென்றும், இவைகளிலிருந்து உண்மை வெளிப்படாதென்றும் தோன்றுவது ஸகஜம்.

உண்மையைக் கண்டுபிடிக்க வழியுண்டா ?

உண்டு.

இவ்விரண்டு பேர்களுக்குள் யாராவது, ஏற்கனவே பொய் சொன்னதாக ருஜு இருக்கிறதாவென்று நாம் முதலில் பார்க்கவேண்டும். இதுவரையில் பிரிடிஷ் அறிக்கையொன்றுவது பொய்யானதில்லை. ஜெர்மன் அறிக்கைகள் பல முழுப்பொய் என்று ரூபிக்கப்பட்டிருக்கின்றன.

ஏற்கனவே நடந்த யுத்த சரித்திரத்திலிருந்து சம்பவமொன்றை எடுத்துக் கொண்டு அதைப்பற்றிய அறிக்கைகளை ஆராய்வோம். கிராப் ஸ்பீ சம்பவத்தை எடுத்துக்கொள்வோம். இதன் நடப்பெல்லாம் இப்பொழுது உலகமறியும். இது சம்பந்தமான ஒவ்வொரு பிரிடிஷ் அறிக்கையும் பிழையில்லை, மிகையில்லை என்று இப்பொழுது நமக்குத்தெரிகிறது.

ஜெர்மனியோ, ஒன்றுக்கொன்று மாறுன பொய் அறிக்கைகளை நாள் தவருது, மணிக்கொன்ருய் விடுத்தது. உலகத்தை ஏய்க்கப்பார்த்தது. நடுநிலைமைத் தேசத்துக் கடலில் ஏற்பட்ட சம்பவமானதால் உண்மையை மறைக்கமுடியவில்லை.

ஆர்க் ராயல் கதையை எடுத்துக்கொள்ளுவோம். இந்தக் கப்பலை அமிழ்த்திவிட்டதாகப் பலமுறை சொல்லப்பட்டது. ஆனுல் முழுகிவிட்டதாகச் சொன்னபிறகு கேப்பில் இந்தக்கப்பல் சண்டை செய்திருக்கிறது ; ஓரானில் சண்டை செய்திருக்கிறது. அநேக பிரிடிஷ் யுத்தக்கப்பல்களை உடைத்துவிட்டதாக ஜெர்மன் அறிக்கைகள் வெளியாக்கியிருக்கின்றன. இவைகள் உண்மையாளுல் பிரிடனுக்கு யுத்தக்கப்பல்களே இப்பொழுது பாக்கியிருக்கமுடியாது. ஜெர்மனி சொல்லுவதெல்லாம் கட்டுக்கதை—கற்பனை.

உண்மையைக் கண்டுபிடிக்க மற்ருெரு வழியுண்டு—எவன் தன் நஷ்டத்தை ஒளிக்காது சொல்லுகிருனே அவனை நம்பலாம்.

தங்கள் நீர்மூழ்கிகளுக்கு ஏற்பட்ட நஷ்டமொன்றையாவது ஜெர்மனி பிரசுரிக்கவில்லை. ஜெர்மனிக்குத் தெரியுமுன்னமே, பிரிடிஷ் நீர்மூழ்கி நஷ்டங்களை பிரிடன் வெளியிட்டிருக்கிறது.

ஜெர்மன் கடல் மூழ்கியொன்று ஸ்காபா ப்ளோ (Scapa Flow)க்குள் பிரவேசித்து ராயல் ஓக்கை உடைத்தபோது, ஜெர்மனிக்கு தெரியுமுன் பிரிடன் சமாசாரத்தைப் பிரசுரித்தது.

நீர்மூழ்கியாலோ, சுரங்கத்தினுலோ சேதப்படும் வியாபாரக் கப்பல் ஜாபிதா, நிறையோடு, வாரா வாரம் பிரிடன் சமர்ப்பிக்கிறது. ஜெர்மனி தன் நஷ்டத்தைச் சொல்லுவதேயில்லை.

ஜெர்மனியிலிருந்தும் நார்வேயிலிருந்தும் வரும் அநேக சாமான் கப்பல்கள் உடைந்துபோனதாக நடு நிலைமைத் தேசச் சாக்ஷிகள் சொல்லுகிறுர்கள். ஜெர்மனி ஒன்றும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டிருக்கிறது. இம்மாதிரி ஏற்பட்ட நஷ்டங்களைப்பற்றி இறந்தவர்கள் கணக்கோடும், சேதமான சரக்கெவ்வளவென்றும் கண்டு பிரிடன் அறிக்கை விடுக்கிறது.

நிலச் சண்டையில் தங்களுக்கு ஏற்பட்ட சேதத்தையும் ஜெர்மானியர் வெளி விடுவதில்லை. பிரான்ஸில் சண்டை ஆரம்பித்தபோது, சென்ற யுத்தத்தில் ஸோம் சண்டையில் தங்களுக்கேற்பட்ட நஷ்டத்தைக்காட்டிலும் இப்பொழுது அதிகமில்லையென்று சொல்லிக்கொண்டார்கள். அதன் பிறகு எத்தனையோ நஷ்டம் ஏராளமாய் ஏற்பட்டிருக்கிற இப்பொழுது கேட்டால் ஸோம் நஷ்டத்தில் ஒரு பாகம்தான் என்கிறுர்கள்.

இக்காரணங்களால் ஜெர்மன் அறிக்கையைக்காட்டிலும் பிரிடிஷ் அறிக்கை நம்பத்தகுந்தது. அறிக்கை தயாரிப்பதில் இரண்டு தேசங்களுடைய நோக்கங்களும் வெவ்வேருயிருக்கின்றன.

எதிரிக்கு அனுகூலமாகும் செய்தியைத் தவிர மற்ற சமாசாரங்களை எல்லாம் உள்ளபடி பிரசுரப்படுத்துவது பிரிடன் கொள்கை.

உண்மையை உரைப்பது ஜெர்மன் நோக்கமல்ல. ஜெர்மனியாருக்கும், இதரர்களுக்கும் மனோபாவத்தைப் புதிதாக மாற்றுவது ஜெர்மனியின் எண்ணம்.

உலகம் மெய்யென்று நம்புவதற்காக நஷ்டத்தைக் குறைத்து ஜெர்மனி காட்டுகிறது.

பிரான்ஸை ஜயித்ததுபோன்ற வெற்றிகளைப்பற்றித்தான் ஜெர்மனி, உண்மையறிக்கைவிடுக்கும். மற்றதெல்லாம் பொய்தான்.

ஜெர்மனி வழக்கமாய்ப் பொய் சொல்வது உலகமறிந்த விஷயம். பொய்க்கு மேல் பொய்யைச் சொல்லிக்கொண்டுபோனுல் உலகத்தை நம்பச் செய்யலாமென்று நினைக்கிறுர்கள். பிரிடன் சொல்வதைப் பொய்யாக்கி விடலாம் என்றும் பார்க்கிறுர்கள். தங்கள் ஜனங்களுக்கு இவ்விதம் தைர்யத்தை உண்டாக்கவும் பார்க்கிறுர்கள்.

ஜெர்மன் அறிக்கைகளை நம்பத்தகாதவையென்று தள்ளிவிடவேண்டும். இந்த ஒரு வருஷ யுத்தசரித்திரத்தை உண்மையாய் வெளியிட்டிருப்பதிலிருந்து பிரிடிஷ் அறிக்கைகளை நம்பவேண்டும்.

4

அனுபந்தம் III.

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

20—8—40.

பொய் சொல்லுவதில் ஜர்மானியரும், இதாலியரும் சமர்த்தர்கள். சில தினங்களில் ஜெர்மனி தன் பொய்யை மட்டுப்படுத்திக்கொள்ளும்; அப்பொழுது இதாலி தன் பொய்யை அதிகப்படுத்திக்கொள்ளும். 20-8-40-ல் வெளிப்பட்ட பெரும் புளுகெல்லாம் இதாலி ரேடியோவிலிருந்து வந்தன. யாரோ மூன்று அமெரிக்கர்களாம்—இவர்களுக்குப் பெயர் கிடையாது; இவர்களில் ஒருவர் ஸ்விட்ஸர்லாந்தைப் பார்க்க வந்த பிரமுகராம்; மற்றொருவர் ராணுவ விசேஷ அனுபவஸ்தராம். இம்மூன்று பேர்களும் பிரிடனைத் தூஷித்து, பிரிடன் ஆபத்தில் மாட்டிக்கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். மிஸ்டர் வெண்டல் வில்கி சொல்லிய இரண்டு வாக்கியங்களை, அவைகளுக்கேற்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து பிரித்து, தப்பு வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது. "தன் தேசத்தை யுத்தத்தில் சேராது வைத்துக்கொள்வது ஒரு தேசத்து பிரஸிடேண்டின் முதற்கடமையாகும்" என்று மிஸ்டர் வில்கி சொன்னாராம். அப்படியானால் முஸோலினி யுத்தத்தில் தன் தேசத்தை ஏன் மாட்டிவிட்டார்?

"யுத்தத்திலும், வியாபாரத்திலும் ஜேர்மனியை முன்னொரு முறை எவ்விதம் தோற்கடித்தோமோ அதே பிரகாரம் இப்பொழுதும் தோற்கடிப்போம். அப்பொழுது நாம் சொன்னபடி ஜேர்மனி ஆடவேண்டும்." என்று மிஸ்டர் வில்கி சொல்லியிருப்பதை இதாலிஒலிபரப்பு பிரஸ்தாபம் செய்யவில்லை.

"பிரிடன்மேல் நடக்கும் ஜெர்மன் விமான எதிர்ப்பைப்பற்றி பி. பி. ஸி. (B. B. C.) ஒலி பரப்புவதெல்லாம் பொய்யென்று இங்கிலாந்தில் இப்பொழுது வசிக்கும் மற்றொரு அமெரிக்க நிருபர் சொன்னாராம். இவருக்கும் பெயர் கிடையாது. ஆனால் மர்ரோ, வாரன் இர்வின் (Warren Irvin)

என்ற இரண்டு அமெரிக்கர்கள் வேறுவித அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள். 'பிரிடனுக்கும், ஜெர்மனிக்கும் ஏற்படும் நஷ்டங்களை மனிதனால் எவ்வளவு சரியாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு சரியாக பிரிடிஷார் கணக்கிட்டுக் கொடுக்கிறார்கள்: பிரிடனுக்கு ஏற்பட்டிருக்கும் வெற்றிக் குறைத்தே கணக்கிடப்பட்டிருக்கிறது' என்று H. R. நிக்கர் பாகர் ஒரு ஹர்ஸ்ட் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். 'எவ்வளவு பிழையின்றிக் கணக்கிட முடியுமோ அவ்வளவு சரியாக பிரிடன் கணக்கிடுகிறது' என்று ஜேம்ஸ் மாக்டானல்ட், நியூயார்க் டைம்ஸில் எழுதியிருக்கிறார். "நான் பிரத்தியக்ஷமாகப் பார்த்தேன். பிரிடிஷ் மக்கள் அதைரியப்படவில்லை. சென்ற வாரத்திய கணக்குகளைப் பரிசோதித்ததில், ஜெர்மன் கணக்குகளெல்லாம் கட்டுக்கதை என்று தெரிந்தது. லண்டன் வெளிப்புறத்திலும், தென்ஜில்லாக்களிலும் வழக்கம்போல் ஜனங்கள் தங்கள் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். எதிர்ப்புகளால் ஒரு தடையும் ஏற்படவில்லை; நான் நேரில் பார்த்தேன்" என்று ஸ்விஸ் பத்திரிகையான பேஸ்லர் நாக்ரிக்டென்ஸுடைய லண்டன் நிருபர் எழுதுகிறார்.

22—8—40.

21-ம் தேதியில் கொடுத்த தப்புச் செய்தி ஒன்றை இன்று (22-ம் தேதியில்) ஜெர்மனி மாற்றி விட்டது. "நேற்று (அதாவது 20-ம் தேதி) விமான எதிர்ப்பு பீரங்கிகளைக்கொண்டு 70 பிரிடிஷ் விமானங்களையும், ஆகாயப்போரில் 50 விமானங்களையும், அதாவது 120 விமானங்களை உடைத்து விட்டதாக" 21-ம் தேதி ஒலிபரப்பில் ஜெர்மனி பிரஸ்தாபித்தது. ஆனால் சீதோஷ்ண (Weather) ஸ்திதி சரியாயில்லாததால் பிரிடிஷ் விமானங்கள் 20-ம் தேதி இரவில் செல்லவேயில்லை; பகலில், சில விமானங்கள் சென்றன. அதாவது, ஜெர்மனி உடைத்து விட்டதாகச்சொன்ன 120 என்ற தொகைக்கும் குறைந்த விமானங்கள்தான் அன்று ஜெர்மனிக்குள் புகுந்தன. இவ்விதம் பிரிடனுடைய அறிக்கை வெளிவந்தவுடன், ஜெர்மனி செய்த தவறுதலை ஒப்புக்கொள்ளாமல், பொதுவாக, 20-ம் தேதியன்று ஜெர்மனிக்குள் எதிரி விமானங்கள் வரவில்லை: ஹாலண்டு, பிரான்ஸுக்குள் பிரவேசித்த விமானங்களில் 10 சேதமாக்கப் பட்டன" வென்று சொல்லி மழுப்பி விட்டது: இது ஆரம்பத்தில் சேதமானதாகச் சொன்ன 120 விமானங்களில் 12-ல்

ஒரு பங்குதான். 'உலகமெல்லாம் ஜெர்மனி—இதாலிய அறிக்கைகளை வாஸ்தவமென்று நம்புவதாக' ஜெர்மனி பீத்திக்கொள்ளுகிறது. இந்த முழுப்புளுகு எப்படி ஏற்பட்டது? தப்பாய் இருந்தால், ஏன் காரணத்தோடு தப்பை ஒப்புக்கொள்ளவில்லை?

பிரிடனை 'முழுமுற்றுகை' போட்டு விட்டதாகவும், இதிலிருந்து பிரிடனுக்கு அபாயங்கள் ஏதோ வரப்போவதாகவும், ஜெர்மனியும், இதாலியும் பயமுறுத்துகின்றன. சண்டை செய்பவர்கள் அபயம் கொடுத்தால் யுத்தப்பிரதேசங்களிலிருந்து குழந்தைகளை வெளிப்படுத்தச் சகாயம்செய்வதாக அமெரிக்கா சட்டம் செய்திருக்கிறது. ஆனால் ஜெர்மனி எந்தக் கப்பலுக்கும் அபயம் கொடுக்க மறுத்துவிட்டதாம்—இது ஜெர்மன் ஒலிபரப்பு.

"ஐரோப்பியக் கடல்களில் ஜப்பானியக் கப்பல்கள் போக ஜெர்மனி அபயம் கொடுத்திருக்கிறது" என்று இதே தேதியில் இதாலி ஒலிபரப்பியிருக்கிறது.

ஜெர்மன் ஒலிபரப்பு உண்மையா? அல்லது இதாலி ஒலிபரப்பு உண்மையா? இரண்டு பேர்களும் சேர்ந்து புளுகவேண்டும். ஏற்கனவே இவர்கள் சந்தித்து இதைப்பற்றி யோசித்தது தெரியும். மற்றொரு முறை கூடி ஆலோசனை செய்யவேண்டும்.

23—8—40.

நடுநிலைமை தேசக்கப்பல்கள் பிரிடனுக்கு வாமுடியாதபடி முற்றுகை போட்டுவிட்டதாக ஜெர்மனி சொன்ன வார்த்தைகள் வீணாய்ப்போயின. இதை ஜெர்மனியே இன்றைய ஒலிபரப்பில் ஒப்புக்கொள்ளுகிறது. "நடுநிலைமை தேசக்கப்பல்களுக்கு நாம் எச்சரிக்கை செய்தும், பொறுப்பில்லாது, போய்க்கொண்டிருக்கின்றன. இது உயிருக்கும், கப்பலுக்கும் ஆபத்து" என்று ஒலிபரப்பப்பட்டிருக்கிறது. இதிலிருந்து கப்பல்கள் வந்துபோய்க் கொண்டிருப்பது வெளியாகிறது; ஜெர்மன் முற்றுகை பலிக்கவில்லை. "ஜெர்மன் எதிர்ப்புக்குப்பயந்து இங்கிலாந்தின் கீழ்கரைக்கு கப்பல்கள் வரவில்லை" யென்றும் இந்தத்தேதி ஒலிபரப்பில் மற்றொரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கப்பலும் வராதபோது ஜெர்மன் விமானங்கள் அங்கே என்ன செய்து கொண்டிருக்கின்றன?

ஆகஸ்ட் 23-ம் தேதி பாம்பாவை பிரிடிஷ் விமானங்களெதிர்த்து, இதாலிக்குச்சொந்தமான இரண்டு நீர்மூழ்கிகள், ஒரு நாசகாரி, ஒரு நீர்மூழ்கி-சாமான்-கப்பல்—இவைகளை நாசமாக்கின. இவைகளையெல்லாம் மறைத்துவிட்டு, "பாம்பா, டெர்னு எதிர்க்கப்பட்டன; சேதம் ஒன்றுமில்லை; ஒருவன் இறந்தான்; 5 பேர் காயம்" என்று சொல்லி அறிக்கையை முடித்துவிட்டது.

24—8—40.

ஸொமாலிலாண்டில் 'பிரிடனை விரட்டிவிட்டதாக' ஜெர்மனியும், இதாலியும் பீத்திக்கொள்ளுகின்றன. அதாவது, "ஸோமாலிலாண்டில் அனுவசியமாய் சேதப்படுத்தாமல் துருப்புகளை தைரியமாய் வெளியேற்றியதை நாம் மெச்சுகிறோம். இந்தச்சைன்யங்களால் இஜிப்தின் தற்காப்பு பலப்பட்டது" என்று சரியான பதில் துருக்கி 24-ம் தேதி ஒலிபரப்பியிருக்கிறது.

25—8—40.

மத்தியதரைக்கடலில் இதாலி வெற்றிபெற்றதாகவும், அதின் அதிசயிக்கத்தக்க தைரியத்தை மெச்சுவதாகவும் ஜெர்மனி சொல்லுகிறது. ஆனால் ஜயித்ததின் விவரங்களைக் காணோம். "அடுத்த யுத்தத்தில் இதாலியை நேசிப்பவன் தோற்பது நிச்சயம்" என்று ஜெர்மன் ராணுவ மந்திரி ஜெனரல் வான் ப்ளாம்பர்க் ஏற்கனவே சொல்லியிருக்கிறார். "முழு முற்றுகை போட்டாய் விட்டது" என்ற ஜெர்மனியின் ஆடம்பர வார்த்தைகளைக் கேட்டுக் காது புளித்து விட்டது. ஆனால் இங்கிலாந்தின் ஏற்றுமதி இறக்குமதி குறையவில்லை. இன்றைக்கும் இந்த ஓலையை மற்றொருமுறை வாசித்துவிட்டு, "பிரான்ஸ், ஹாலண்டு, நார்வே, போலண்ட் குழந்தைகளை பிரிடன் தன் கடல் பலத்தைக்கொண்டு, பட்டினி போடப்பார்க்கிற" தென்றும் புலம்புகிறது. பிரிடனைத்தான் 'முழுமுற்றுகை' போட்டாய் விட்டதே; அதற்குக் கடல் பலம் இனியேது: ஏன் அதைக்கண்டு பயப்பட வேண்டும்?

அமெரிக்க நிருபரான நிக்கர் பாகர் பிரிடிஷ் அபிமானியல்லவென்பது பிரஸித்தம்; லண்டனுக்கருகாமையில் நடந்த விமான எதிர்ப்பு ஓய்ந்தவுடன் இரண்டு மணி நேரம் இவர் லண்டனைச் சுற்றிப்பார்த்து, ஊரெல்லாம் பாழாய் இருப்பதாகச் சொன்னதாக இன்று வந்த ஜெர்மன் ஒலிபரப்பு பிரஸ்தாபிக்கிறது. இதே நிக்கர் பாகர் 20-ம் தேதி "இந்த விமான எதிர்ப்பைப்பற்றி கோயபல்ஸ் (ஜெர்மனி) சொல்லுவதெல்லாம் பொய். அடுத்த படையெடுப்பின் உண்மை விவரத்தை, கோயபல்ஸ் புளுகுவதற்கு முன்னாலேயே, நானே சொல்லிவிடுகிறேன். இந்த நெருக்கடியில் பிரிடிஷ்காரர்கள் சிறப்பாய்ச் சண்டைசெய்கிறார்கள். அவர்களே வெற்றியடையத் தகுதியுள்ளவர்கள்." என்று சொல்லி இருக்கிறார். பிரிடனிடத்தில் அனுதாபமில்லாத நிக்கர் பாகரே இவ்விதம் ஸ்தோத்திரம் செய்வதால் அவர் வார்த்தைக்கு நாம் அதிக மதிப்புக்கொடுக்கவேண்டும்.

பிரிடிஷ் கவர்ன்மெண்டோடு சண்டை போட்டுக்கொண்டு நார்வே அரசர் அமெரிக்காவுக்குப் போய்விட்டாரென்று ஒரு ஹாலண்டு செய்தி

வந்திருக்கிறது ; இது பிரெஞ்சு ஒலிபரப்பிலிருந்து எடுத்ததாகவும் சொல்லுகிறது. ஹாலண்டு, பிரெஞ்சு ஒலிபரப்புகள் இரண்டும் ஜெர்மனியின் கையிலிருக்கின்றன. ஒரே பொய்தான். ஒன்று மற்றொன்றிலிருந்து சமாசாரம் பெறுவதாகச் சொல்லுவது நகைப்புக்கிடமாயிருக்கிறது நார்வே அரசர் இங்கிலாந்தைவிட்டுப் போகவில்லை. ஆகஸ்டு 26-ம்தேதி லண்டனில் இருந்தே அவர் ஒலிபரப்பி, ஜெர்மன் செய்தி பொய்யென்று ஸ்தாபித்தார்.

B—ஆசியா கண்டத்துப் பாஷைகளில் ஒலிபரப்பு.

20—8—40.

எல்லாப் போர்முனைகளிலும் பிரிடன் தோற்றுவிட்டதாக, இந்தியாவுக்கு ஜெர்மனி இந்துஸ்தானியில் அடிக்கடி ஒலிபரப்புகிறது. நம்புவாரைக் காணோம். பிரிடன் எல்லாவிடங்களிலும் தோற்றுப் போய்விட்டால், ஜெர்மனியும், இதாலியும், இப்பொழுது யாரோடு சண்டை செய்கின்றன ? இந்தியத்துருப்புகள் இஜிப்திலிருந்து திரும்பிவர இந்தியர்கள் கேட்கவேண்டுமென்று ஜெர்மனி யோசனை சொல்லுகிறது. என்ன கவலை ! ஜெர்மனியும், இதாலியும், இந்தியத் துருப்புகளைக் கண்டால் பயப்படுகின்றன : இவர்கள் இல்லாவிட்டால் சண்டை செய்வது சுலபமென்று நினைக்கின்றன. இந்தியத் துருப்புகளை இவ்விதம் மதிப்பதில் நமக்குச் சந்தோஷம்தான்.

21—8—40.

ஸோமாலியைப் பிடித்ததைப்பற்றி, பிரமாதமாக அராபியில் இதாலி தன்னைப்புகழ்ந்து கொள்ளுகிறது. இதாலிக்கு செங்கடல் ஆதிபத்தியம் வந்துவிட்டதாம். இதாலிக்கு நிலப்படைதானிங்கு உண்டு. நிலப்படைக்குக் கடலாதிபத்தியம் எப்படி வரும்? நிர்ப்பயமாய் மெக்காவுக்கு யாத்திரை செய்யலாமென்று பிரிடன் வாக்குறுதி செய்திருப்பதிலிருந்து பிரிடன் கப்பல் படையின் ஆதிக்கத்தில் செங்கடலிருப்பது வெளிப்படும்.

22—8—40.

மௌலானா அசாத் வைஸ்ராய்க்கு அனுப்பியிருக்கும் பதிலைக்கண்டு ஜெர்மனி மகிழ்கிறது. இந்தச் சந்தோஷத்தை மறைக்க முடியவில்லையென்று இந்துஸ்தானியில் ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது.

23—8—40.

"ஜெர்மன் எதிர்ப்பால், பிரிடனில் காயப்பட்டவர்களதிகம்: ஆஸ்பத்திரிகளில் இடமில்லை; கிராமங்களிலுள்ள பெரிய வீடுகளெல்லாம் ஆஸ்பத்திரியாய், அவசா அவசரமாய் மாற்றப்பட்டிருக்கின்றன. ஜெர்மன் பாயும்-விமானங்களின் சிறகுகளின் ஓசையைக் கேட்டுப்பயந்து மூளை கலங்கிப்போகிறார்கள்," என்று பலவிதமாக ஜெர்மனி இன்று இந்துஸ்தானியில் ஒலிபரப்பியிருக்கிறது. வழக்கம்போலச் செய்யும் பயப்பிரசாரம். இதெல்லாம் நேரில் பார்த்த அமெரிக்க நிருபர்கள் பிரிடிஷாருடைய மனோ தைர்யத்தைப் புகழ்கிறார்கள். லண்டனை எதிர்க்கும் சமயங்களிலும், வழக்கம்போல், பஸ், டிராம்வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. 'பிரிடிஷ் மக்களின் தைர்யத்தைக் கெடுக்கச்செய்த முயற்சியெல்லாம் வீணாய்ப்போய் விட்டது' என்று ஸ்விஸ் பத்திரிகை நக்ர்க்டன் சொல்லுகிறது; ஆகஸ்ட் 23-ல் ஸைகான் ரேடியோவும் இதை ஒலிபரப்பியிருக்கிறது.

24—8—40.

இந்தியாவுக்கு வைஸ்ராய் கொடுப்பதாகச் சொல்லும் சீர்திருத்த ஏற்பாடுகளை காங்கிரஸ் காரிய கமிட்டி நிராகரித்துவிட்டதைப்பற்றி ஜெர்மனி பிரமாதப்படுத்துகிறது. ஜெர்மன் ஆதிக்கத்தில் தங்களுக்கு அடிமைத் தனம் வந்துவிடுமென்று இந்தியர்கள் அனைவருக்கும் தெரியும். ஆகையால் பிரிடிஷாரிடம் விசுவாசிகளாய் இருக்கிறார்கள். இதையெல்லாம் ஜெர்மன் ஒலிபரப்பு பிரஸ்தாபிக்கவேயில்லை.

26—8—40.

இஜிப்த் அரசாகிய பரூக்கை நீக்கிவிடப் போவதாயும், இஜிப்த் பட்டாளங்கள் பிரிடன் கக்ஷியில் சேர்ந்து சண்டைசெய்ய மறுப்பதால் நிராயுதபாணிகளாக்கப் பட்டிருக்கின்றனவென்றும், தங்களுடைய சுயேச்சையை அடைவதற்குமட்டும் சண்டை செய்வார்களென்றும் அராபியில் இதாலி ஒலிபரப்புகிறது. நிராயுதபாணியான பிறகு (சுயேச்சைச்) சண்டை எவ்விதம் படுகிறதென்று தெரியவில்லை. இஜிப்தில் பிரிடன் பலமாய்ச் சண்டை செய்யத் தயாரித்துக்கொண்டிருப்பதிலிருந்து, இதாலிக்கும், ஜெர்மனிக்கும் பயம்பிடித்துவிட்டது. துருக்கிக் காக்ஷிசாலையில் பிரிடிஷ் சாமான்கள், மத்தியதரைக்கடல் மார்க்கமாய் வந்து, வைக்கப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து பிரிடனுடைய கடல் ஆதிபத்தியம், இதாலி சொல்லிக் கொண்டிருக்கிறபடி, குறையவில்லையென்று புலப்படும்.

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் X.

1940—				மணி.
ஸெப்டம்பர் 14,	சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
15,	ஞாயிற்றுக்கிழமை.	குழிபிரை ...	,,	5.30
		ராங்கியம் ...	,,	5.30
		கீரனூர் ...	,,	5.30
16,	திங்கட்கிழமை ...	ராணி பெண்பாடசாலை ...	காலை	10.30
		காலேஜ் (1) ஆங்கிலம் ...	,,	10.25
		நச்சாந்துபட்டி ...	மாலை	5.30
		ஆலங்குடி ...	,,	5.30
17,	செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (2) தமிழ் ...	காலை	10.25
		விராலிமலை ...	மாலை	5.30
		வேங்கடகுளம் ...	,,	5.30
18,	புதன்கிழமை ...	கரம்பக்குடி ...	,,	5.30
20,	வெள்ளிக்கிழமை...	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00

பிரஸங்கம் XI.

21,	சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
22,	ஞாயிற்றுக்கிழமை.	வேகுப்பட்டி ...	,,	5.30
		விராச்சிலை ...	,,	5.30
		ராமச்சந்திரபுரம் ...	,,	5.30
23,	திங்கட்கிழமை ...	காலேஜ் (1) ஆங்கிலம் ...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை ...	,,	10.30
		கோனாபட்டு ...	மாலை	5.30
24,	செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (2) தமிழ் ...	காலை	10.25
		கீழாநிலை ...	மாலை	5.30
		எம்பல் ...	,,	5.30
25,	புதன்கிழமை ...	அரிமளம் ...	,,	5.30
26,	வியாழக்கிழமை ...	ராயவரம் ...	,,	5.30
27,	வெள்ளிக்கிழமை...	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00

Sri Brihadamba State Press, Pudukkottai, 4,400—14-9-40.